


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் கொளத்தூர், பெரியார் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக K5 – பெரவள்ளூர் புற காவல் நிலையம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.11.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீன் வள வாரியத்தின் தலைவர் டாக்டர் அ. ஜோசப் ஸ்டாலின் மற்றும் உறுப்பினர்கள் – ஏ.தாஜீதீன், என்.ஜே.போஸ், பி.அந்தோணி ஸ்டாலின், ஏ.ஜோஸ், வி.செல்வபாரதி, ஆர்.வி.கணேஷ், ஏ.பி.பன்னீர்செல்வம், எம்.முருகன், எக்ஸ்.லெனின், கோ. மனோகரன், எம்.ஜெபமாலை பர்னாந்து, ஜேசுராஜா, பிஎஸ்.ராஜா ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். இச்சந்திப்பின்போது, மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் உடனிருந்தார்.

### முதல்வரின் ‘திராவிட மாடல்’ அரசு, விவசாயிகள் உரிமையை ஒருபோதும் விட்டுக் கொடுக்காது!

# மேகதாது அணைக்கு உச்சநீதிமன்றம் அனுமதி என்பதில் எள்ளளவும் உண்மை இல்லை!

## நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் திட்டவட்டம்!

சென்னை, நவ. 15-

மேகதாதுவில் அணை கட்டுவதற்காக மாண்பமை உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதாக வெளிவரும் தகவல்களில் எள்ளளவும் உண்மை இல்லை என நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் விடுத்துள்ள அறிக்கையில் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

அமைச்சர் துரைமுருகன் அறிக்கை வருமாறு:

காவிரி ஆற்றின் குறுக்கே 67 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட ஓர் அணையை மேகதாதுவில் அமைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை கர்நாடக அரசு தன்னிச்சையாகத் தயாரித்து, மத்திய நீர்வளக் குழுமத்திற்கு 2018ஆம் ஆண்டில் சமர்ப்பித்ததை எதிர்த்து தமிழ்நாடு அரசு மாண்பமை உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தது.

**கர்நாடக அரசின் செயலை தடுத்து நிறுத்திய தமிழ்நாடு அரசு!**

இத்திட்டத்தை மேற்கொள்வதற்காகத் தேவைப்படும் சுற்றுச்சூழல் தாக்க அறிக்கைக்கான ஆய்வு வரம்புகளுக்கு (Terms of Reference) ஒப்புதல் பெறுவதற்காக, ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தை கர்நாடக அரசு கடந்த 2020-ஆம் ஆண்டு அணுகிய போது, மற்றொரு மனுவை மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்து தமிழ்நாடு அரசு அதைத் தடுத்து நிறுத்தியது. இதனைத் தொடர்ந்து, கர்நாடக அரசின் நிதிநிலை அறிக்கையில் மேகதாது திட்டத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியபோது, தமிழ்நாடு அரசு தனது கடும் எதிர்ப்பை தெரிவித்ததோடு, அதற்கான எந்தவிதமான அனுமதியையும் அளிக்கக்கூடாது என்று ஒன்றிய அரசையும், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தையும் வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 21-3-2022 அன்று ஒருமனதாக தீர்மானத்தையும் இந்த அரசு நிறைவேற்றியது.

மேலும், முதலமைச்சர் அவர்கள் இந்திய பிரதமர் அவர்களை 31-3-2022 மற்றும் 26-5-2022 அன்று நேரில் சந்தித்த போது மேகதாது திட்டத்திற்கு எவ்வித அனுமதியும் அளிக்கக்கூடாது என ஒன்றிய ஜல்சக்தி அமைச்சருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் வலியுறுத்தினார்.

இந்த காலக்கட்டத்தில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு,



கர்நாடக அரசின் கருத்துருவை பரிசீலிக்க அதிகாரம் உள்ளது என ஒன்றிய அரசு கருத்து தெரிவித்ததையடுத்து, இந்த விரிவான அறிக்கை பற்றிய பொருண்மைகள் இந்த ஆணையத்தின் விவாதப் பட்டியலில் சேர்க்கப்பட்ட போதும், இதனை பரிசீலிப்பதற்கான அதிகாரம் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு இல்லை என்பதை வலியுறுத்தி மேலும் ஒரு மனு 7-6-2022 அன்று தமிழ்நாடு அரசால் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

**மேகதாது அணைத்திட்டம் விவாதிக்கப்படவில்லை!**

இவ்வாறு தமிழ்நாடு அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளின் அடிப்படையில், அன்றிலிருந்து இன்றுவரை காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், மேகதாது அணையின் விரிவான திட்ட அறிக்கை விவாதிக்கப்படவில்லை. மேலும், தமிழ்நாடு அரசு எடுத்த பல்வேறு தொடர் முயற்சிகளின் பயனாக, மேகதாது அணை பற்றிய கருத்துருவை காவிரி நீர் மேலாண்மை ஆணையம், மத்திய நீர்வளக் குழுமத்திற்கு 9-2-2024 அன்று திருப்பியனுப்பியது. இது தமிழ்நாடு அரசின் முயற்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

இந்த சூழ்நிலையில், மேகதாது அணை குறித்துப் பேசிய கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள், இந்த பாசன ஆண்டு 2025-2026இல் தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவேண்டிய நீரின் அளவை விட கூடுதலாக நீர் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேகதாது அணையால் தமிழ்நாட்டுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் தெரிவித்துள்ள கூற்று எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல.

**மேகதாது அணை கட்டப்பட்டால் தமிழ்நாடு விவசாயிகளுக்கு பாதிப்பு!**

அதிக மழைப்பொழிவு இருக்கக்கூடிய ஆண்டுகளில் வேறுவழியின்றி தமிழ்நாட்டுக்கு கர்நாடக அரசு நீரைத் திறந்து விடுகிறதேயன்றி, வறட்சி ஆண்டுகளில் நமக்கு விகிதாச்சாரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவிற்கான நீர் வழங்கப்படுவது இல்லை என்பதையும், மேகதாது அணை கட்டப்பட்டால் வறட்சி ஆண்டுகளில், நமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நீர் கிடைக்காத சூழல் உருவாகும் என்பதையும் அனைவரும் அறிவார்கள். எனவே, மேகதாதுவில் அணை கட்டப்படுவது என்பது, தமிழ்நாட்டு விவசாயிகளை மிகவும் பாதிப்புக்குள்ளாக்குவதோடு, காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பான நடுவர் மன்றம் மற்றும் மாண்பமை உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளுக்கு முரணாகவும் அமையும் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

**டெல்டா விவசாயிகளின் உரிமைகளை விட்டுக் கொடுக்கமாட்டோம்!**

இந்நிலையில், இந்த அணை தொடர்பான வழக்குகளை விசாரித்த மாண்பமை உச்சநீதிமன்றம், நேற்று (13-11-2025) மேகதாது அணை கட்டுவதற்கு எதிரான தமிழ்நாடு அரசின் கருத்துக்கள் அனைத்தையும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் மத்திய நீர்வளக் குழுமத்திடம் தெரிவிக்கலாம் என்றும், தமிழ்நாடு அரசின் கருத்துக்களைக் கேட்காமல் எந்தவொரு முடிவும் எடுக்கக்கூடாது என்றும் ஆணையிட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில், வெற்றிகரமாக மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்தியதைப் போன்றே, இனியும் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திடமும், மத்திய நீர்வளக் குழுமத்தின் முன்பும் தமிழ்நாடு அரசு தனது வலுவான வாதங்களை முன்வைக்க உள்ளது.

இந்நிலையில், மேகதாதுவில் அணை கட்டுவதற்கு மாண்பமை உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்து விட்டதாக சில தவறான தகவல்கள் வெளிவருவது கண்டிக்கத்தது என்பதையும், இத்தகவலில் எள்ளளவும் உண்மை இல்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரை, காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்காது. காவிரி நடுவர் மன்றம் மற்றும் அதனைத் தொடர்ந்து மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராக காவிரியின் குறுக்கே புதிய அணை கட்டுவதற்கான கர்நாடக அரசின் எந்தவொரு முயற்சியையும், தமிழ்நாடு அரசு முளையிலேயே கிள்ளி எறியும்.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

---

### சிவசங்கர் அறக்கட்டளை சார்பில்–குன்னம் தொகுதி செந்துறையில்

# “தேர்வை வெல்வோம்” வழிகாட்டி வினா-விடை தொகுப்பு கையேடு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார்!

அரியலூர், நவ.15-

அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியத்தில்

“சிவசங்கர் அறக்கட்டளை சார்பில்” குன்னம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், நமங்குணம், குழுமூர், மணபத்தூர், சோழன்குடிகாடு, அயன்தத்தனூர் உள்ளிட்ட அரசு மேல்நிலைப்பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும், 10.,11,12 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு, பொதுத்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ள உதவும் “தேர்வை வெல்வோம்” வழிகாட்டி வினாவிடை தொகுப்பினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர்கொண்டு, வெற்றிபெற அன்பார்ந்த மாணவச் செல்வங்களை வாழ்த்தி



மேலும், அப்பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் குடிநீர் பாட்டில்களையும் வழங்கி மாணவ, மாணவியர்களிடம் உரையாற்றினார்.

இதில் அமைச்சர் சா.சி. சிவசங்கர் பேசியதாவது:

கடந்த ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரியலூர் மாவட்டம் முதலிடம் பிடித்து வெற்றிபெற்றது

தற்பொழுது இது மிகப் பெரிய வரலாற்று நிகழ்வாக உள்ளது அரியலூர் மாவட்டம் மாநிலத்தில் முதன்மையாக வந்துள்ளது கடந்த காலங்களில் பின்தங்கி இருந்த இந்த அரியலூர் மாவட்டம் கல்வியில் முன்னேறி இருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும் கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்வில் மாநிலத்தின் முதலிடம் என்பதும் பிளஸ் 2 வில் முதலிடம் என்பது இந்த மாவட்டங்களின் வளர்ச்சியை காட்டுகிறது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி வழிகாட்டுதல் படி இந்த துறை மிக சிறப்பாக செயல் பட்டு வருகிறது.

முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளின் ஆசிரியர்கள் முழு உழைப்பையும் வழங்கி வெற்றி வாய்ப்பை இந்த மாவட்டங்களில் கொடுத்துள்ளார்கள் மாணவ மாணவிகளும் மிகச் சிறப்பான முயற்சி செய்து படித்து கடந்த ஆண்டைப்போல இந்த ஆண்டும் மாணவ, மாணவியர்கள் நன்றாக படித்து வெற்றி வாகை சூட வேண்டும்

நமது மாவட்டத்தின் கல்வித்துறை சார்ந்த அத்தனை அதிகாரிகள் ஆசிரியர்களுக்கும் மாணவ செல்வங்களுக்கும் அரியலூர் மாவட்ட மக்களின் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடந்த 2006-2011 ஆண்டில் ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது “தேர்வை வெல்வோம்” என்ற புத்தகம், கையேடு வழங்கி சிறந்த ஆசிரியர்களை கொண்டு வழிகாட்டி பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கு கொடுத்தேன் தொடர்ந்து கல்விக்கு பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளோடு செயல் பட்டு வருகிறேன். அதன் பெயரிலேயே 10,11,மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் என்னால் முடிந்த அளவில் முக்கிய வினா - விடைகள் அடங்கிய புத்தகத் தொகுப்பை வழங்கி சிறிய அளவிலான எனது பங்களிப்பை அளித்து வருகிறேன்.

அதேபோல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் நேரடியாக சென்று மாணவ-மாணவிகளை சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்து உற்சாகப் படுத்தி வருகிறேன் நான் வழங்கிய கையேடு உங்களுக்கு உதவியாக இருந்திருக்கும் எனினும் ஆசிரியர்கள் பங்களிப்பு இதில் முக்கியமானது,

மாணவ, மாணவியர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் தாய், தந்தை, ஆசிரியர்களின் தியாகத்தை நினைத்து நன்றாக படித்து தேர்வில் வெற்றிபெற வேண்டும், தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு துணை முதல்வர் சார்பிலும், எனது சார்பிலும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என கூறினார்.

---

### மேற்குவங்கத்தில் - ஆதார் கார்டுதாரர்கள்

# 34 லட்சம் பேர் உயிருடன் இல்லை!

## யு.ஐ.டி.ஏ.ஐ. தகவல்!

கொல்கத்தா, நவ.15-

மேற்கு வங்க மாநிலத்தில் 34 லட்சம் ஆதார் கார்டு தாரர்கள் தற்போது உயிருடன் இல்லை என்ற விவரத்தை தேர்தல் ஆணையத்திடம் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யு.ஐ.டி.ஏ.ஐ.) தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த ஆணையம் கூறுகையில், “ஆதார் அட்டை கடந்த 2009 ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது முதல் இந்த அடையாள அட்டையை பெற்ற 34 லட்சம் பேர் தற்போது உயிருடன் இல்லை. மேலும், இம்மாநிலத்தில் 13 லட்சம் பேர் ஆதார் அட்டைகளை வைத்திருக்கவில்லை. ஆனால், அவர்கள் இறந்துவிட்டனர்” என்று தெரிவித்துள்ளது.

---

# ஆசிரியர் தகுதித் தேர்வு இன்று தொடக்கம்:

# 4.80 லட்சம் ஆசிரியர்கள் எழுதுகின்றனர்!

சென்னை, நவ.15-

பள்ளிகளில் ஒன்று முதல் 8ம் வகுப்பு வரை பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும் டெட் எனப்படும் ஆசிரியர் தகுதித்தேர்வு தேர்ச்சி கட்டாயம். டெட் தேர்வில் தாள்1 இடை நிலை ஆசிரியர்களுக்கும், தாள் 2 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் நடத்தப்படுகிறது. டெட் தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தி வருகிறது.

தமிழகத்தில் 2025ம் ஆண்டு டெட் தேர்வுக்கான அறிவிப்பை ஆசிரியர் தேர்வு வாரியம் கடந்த ஆக.11ம் தேதி வெளியிட்டது. இந்நிலையில், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு டெட் தேர்வு இன்று (நவ.15) தொடங்குகிறது.

முதல் நாளில் டெட் தாள் 1 தேர்வும், 2வது நாளான ஞாயிற்றுக்கிழமை தாள் 2ம் நடைபெற உள்ளன. தாள்1 தேர்வில் ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 370 பேர், தாள் 2ல் 3 லட்சத்து 73 ஆயிரத்து 438 பேர் என மொத்தம் 4 லட்சத்து 80 ஆயிரத்து 808 பேர் கலந்து கொள்கின்றனர். தாள்1க்கு 367 தேர்வு மையங்களும், தாள்2க்கு 1,241 தேர்வு மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

---

### தி.மு.க. சட்ட திட்டம் விதி 31, பிரிவு 21-ன்படி

## தி.மு.க. கல்வியாளர் அணி துணைத் தலைவர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

**கழக சட்டதிட்ட விதி:31, பிரிவு: 21–ன் படி, தி.மு.க. கல்வியாளர் அணி துணைத் தலைவராக டாக்டர். வா. மைத்ரேயன்,** (29, முதல் அவென்யூ, பெசன்ட் நகர், சென்னை - 600090) **அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.**

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.11.2025

---

## தலைமைக் கழக அறிவிப்பு!

நாகை மாவட்டம், வேதாரண்யம் மேற்கு ஒன்றியம், மாவட்டப் பிரதிநிதியும் - கொண்டாங்காடு கிளைச் செயலாளருமான இ.கே.ராம் (எ) வை.ராமநாதன் அவர்கள், அவர் வகித்து வந்த பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.11.2025

---

### கருநாடக மாநிலக் கழக

## பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கருநாடக மாநிலக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கருநாடக மாநிலக் கழகப் பொறுப்பாளர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

பொறுப்பாளர் : **எம். பெரியசாமி,** எண்.17, சிண்டிகேட் வங்கி குடியிருப்பு, 3வது கிராஸ், 7வது மெயின் ரோடு, பனாசங்கரி 3வது ஸ்டேஜ், பெங்களூரு - 560 085.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :

1. ந.இராமசாமி, 3வது கிராஸ், 6வது பிளாக், ராஜாஜி நகர்.
2. கே. தட்சிணாமூர்த்தி, கெம்பன்னா ரோடு, மாருதிசேவா நகர்.
3. ஏ.டி.ஆனந்தராஜ், பெங்களூரு.
4. ஆர். அன்பழகன், 3வது கிராஸ், நாகப்பா பிளாக், ஸ்ரீராமபுரம்.
5. மு.கருணாநிதி, தன்சந்திரா, தங்கவயல், கருநாடகா.
6. திருமதி சற்குணம், பெங்களூரு.
7. திருமதி முருகமணி, எலக்ட்ரானிக்ஸ் சிட்டி பேஸ்-1.
8. போர்முரசு கதிரவன்

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.11.2025